மென்றும் எட்டு கோடி ரூபாய்த் திட்டமென்றும் பிரிக்கப்பட்டது. முதலில் மத்திய அரசே இதை மான்யமாகக் கொடுக்கும் திட்டம் என்று சொன்னார்கள். பின்னர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். கடனாகக் கொடுங்கள் என்று கேட்டோம். கேட்டுக் கேட்டு இப்போது இரண்டு கோடி ரூபாய்தான் கிடைத்திருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, does it connect Muthukadu and Thiruvanmiyur in the East Coast Road which is going *via* Mahabalipuram to Kanyakumari.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Yes, Sir.

Multi-storeyed Building.

* 60. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any proposal to construct multi-storeyed building behind Anna Statue in Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

பல மாடிக் கட்டடம்.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி: *மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:*

(அ) சென்னை, அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலைக்குப் பின்புறமாக பல மாடிக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : *(அ) ஆம்.*

(இ) இந்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Pedestrian Subway Opposite to Moore-Market.

* 61. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to put up a pedestrian subway opposite to Moore-Market on the Poonamallee High Road. Madras; and

(*b*) if so, the details thereof ?